பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 01 செவ்வாய்க்கிழமை 15.02.2022 கதிர் 328

## யாழில் ஒரே நாளில் 2 பேர் டெங்கால் பரிதாப மரணம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் இருவர் டெங்கு நோய் காரணமாக பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அராலி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வி.அஜேய் எனும் வயது 11 எனும் சிறுவனும், 2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டியைச் ☞2

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி

# கொழும்பில் இன்று பெரும் கையெழுத்துப் போராட்டம்!

### அரசியல் பிரமுகர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பங்கேற்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி மாபெரும் கையெழுத்துப் போராட்டம் இன்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான முதலாவது கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ☞2

## மக்கள் வங்கிக்கு கோப் குழு அழைப்பு

எதிர்வரும் நாள்களில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) முன்னிலையில் மேலும் சில அரசாங்க நிறுவனங்கள் அழைக்கப்பட்டுள்ளன. கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி 23ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், பெப்ரவரி 24 ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் ☞2

## டீசலுடன் இலங்கை வந்த இந்தியக் கப்பல்!



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டைக் கருத்தில்கொண்டு இந்தியாவில் ☞2

## பேராயரும் கையெழுத்து!



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரும் ஆவணத்தில் கொழும்பு பேராயர் ☞2

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்கக் கோரி வீதி மறியல் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கல்லூண்டாய் வெளிக்குடியிருப்பு மக்கள் இன்று காலை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட நாள்களாகத் தீர்வு வழங்கப்படாத தமது குடிதண்ணீர் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்க வேண்டும் எனக் ☞2

## தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது சுகாதாரப் பிரிவின் வேலைநிறுத்தம்

சுகாதார உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டம் நாளை காலை 8 மணி முதல் 14 நாள்களுக்குத் தற்காலிகமாக இடை ☞2




### வவுனியா - மரக்காரம்பளை வீதியில்

## மூன்று மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து; இளைஞன் சாவு



(வவுனியா நிருபர்)

வவுனியா, மரக்காரம்பளை வீதியில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்த மோட்டார் சைக்கிள் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது - ☞2

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு உடன் தீர்வு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டு யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியின் கல்லூண்டாய் பகுதி வீதியை மறித்து வீதியின் குறுக்கே பொதுமக்களும் மாணவர்களும் அமர்ந்திருந்து கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் குறித்த வீதியின் போக்குவரத்து ஒரு சில மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், போராட்ட இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் வீதியை வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்த மக்களை அகற்றி போக்குவரத்தை முன்னெடுக்க வழி ஏற்படுத்தினர்.

தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களுடன் பேச்சுகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து தீர்வு தருகிறோம் என வாக்குறுதி வழங்கியதை அடுத்து அதிகாரிகள் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார் உள்ளிட்டவர்கள் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில் பிரச்சினைக்கு உரிய தீர்வை உடனடியாகப் பெற்றுத் தருகிறோம் எனத் தெரிவித்தோடு குடியிருப்புப் பகுதிக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதை அடுத்து போராட்டம் நிறைவு பெற்றது.

அத்தோடு கல்லூண்டாய் வெளிக்குடியிருப்பு மக்களின் குடிதண்ணீர் தேவைக்கு உடனடியாகத் தீர்வை வழங்குவதற்காக யாழ். மாவட்ட இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவால் குடிதண்ணீர் விநியோகம் ஒவ்வொரு வீடுகளுக்கும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தற்காலிகமாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அந்தச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. 18 சுகாதார சங்கங்கள் இணைந்து ஒன்பது நாள்கள் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூன்று மோட்டார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, கணேசபுரம் பகுதியிலிருந்து மரக்காரம்பளை வீதியூடாக பெண்ணொருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் எதிர்ப்பக்கத்திலுள்ள ஒழுங்கை ஒன்றுக்குள் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது எதிர்த்திசையில் வந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள், பெண் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் சாரதியான பண்டாரிக்குளம், அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய சிறிரஞ்சன் என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றைய இரு மோட்டார் சைக்கிள்களின் சாரதிகளும் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த நெளுக்குளம் போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

## மக்கள் வங்கிக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனமும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அபிவிருத்தி லொத்தர் சபை மார்ச் 10ஆம் திகதியும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மார்ச் 11ஆம் திகதியும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

மார்ச் 23ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், மார்ச் 24ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், மார்ச் 25ஆம் திகதி மக்கள் வழங்கியும் அழைக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான கோப் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றதுடன், இதில் கோப் குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

## கொழும்பில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், குறித்த போராட்டம் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்ததோடு கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த கையெழுத்துப் போராட்டம் இன்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எ.ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரும் இந்தக் கையெழுத்துப் போராட்டம் கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி என நாடெங்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் இன்றைய போராட்டத்தில் கலந்துகொண்ட தெற்கு அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

## டீசலுடன் இலங்கை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து அனுப்பிவைக்கப்பட்ட 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பல் ஒன்று இலங்கையை வந்தடைந்தது.

கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த குறித்த கப்பலை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உள்ளிட்ட குழுவினர் பொறுப்பேற்றனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியா 50 கோடி அமெரிக்க டொலரைக் கடனாக வழங்க முன்வந்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

எனினும், அந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் மின்சார விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி இந்தியாவிடம் இருந்து உடனடியான உதவிகளைக் கோரியிருந்தோம்.

இதனைக் கருத்தில்கொண்டு 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

## பேராயரும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இன்று கையெழுத்திட்டுள்ளார்.

## யாழில் ஒரே நாளில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த கஜந்தினி யோகராசா எனும் 18 வயது யுவதியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

டெங்கு காரணமாக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளையில் இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களது மரணங்களின் பின்னர் யாழ். குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் பரவல் அச்சமும் வெளிவந்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜெனிவா களம் தயார்!

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை எதிர்கொள்ளப் போகும் இராஜதந்திர நெருக்கடிகள் குறித்து இப்போது பரவலாகப் பேசப்படுகின்றன.**

**இலங்கையின் நிலைமை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் எழுத்து மூல அறிக்கையை இந்தத் தடவை சமர்ப்பிக்கவிருக்கின்றார்.**

**அவர் சமர்ப்பிக்கப் போகும் அறிக்கையின் பிரதி நேற்று இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படவிருந்தது. இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று அதனைப் பெற்றுக் கொண்டிருக்கும் எனக் கூறப்பட்டது.**

**இது தொடர்பில் இலங்கையின் பிரதிபலிப்பு ஏதும் இருந்தால் வரும் 19 ஆம் திகதிக்கு (வரும் சனிக் கிழமைக்கு) முன்னர் அனுப்பப்பட வேண்டும்.**

**அதன்பின்னர் ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையாளர் இறுதி செய்யப்பட்ட தனது அறிக்கையை வரும் 28 ஆம் திகதி மனித உரிமைகள் கவுன்ஷிலில் சமர்ப்பிப்பார். அதன் பின்னர் அது பகிரங்க ஆவணமாகிவிடும்.**

**அந்த அறிக்கையை ஒட்டி உறுப்பு நாடுகளின் அவதானிப்புக்கள் அந்த விவாதத்தின் போது வெளிப்படுத்தப்படும். அவ்வளவுதான் இம்முறை விடயம்.**

**அந்த அறிக்கை கவுன்ஸிலின் கூட்டத்தில் வாக்கெடுப்புக்குக் கூட விடப்படமாட்டாது.**

**ஆணையாளரின் அறிக்கை குறித்து பல்வேறு நாடுகளின் கருத்து நிலைப்பாடுகள் மட்டுமே இந்தக் கூட்டத்தொடரில் சுருக்கமாகப் பிரதிபலிக்கப்படும் என்பதால் இந்தத் தொடர் – இப்போதைய 49 ஆவது அமர்வு – அப்படி ஒன்றும் இலங்கைக்குத் தலைபோகும் விடயமாக அமையப் போவதில்லை என்பது தெளிவு.**

**ஆனால் அடுத்த கூட்டத் தொடரில் – செப்டெம்பரில் – இலங்கை தொடர்பாக முன்னெடுக்கப்படக்கூடிய காட்டமான நடவடிக்கைகளுக்கு முன்னாயத்தப்படுத்தும் விவகாரங்கள் இந்தக் கூட்டத் தொடரில் நிச்சயம் கட்டவிழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**கடைசியாக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய 46/01 இலக்கத் தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்திய பல முக்கிய விடயங்கள் – அம்சங்கள் – இலங்கைத் தரப்பால் நிறைவேற்றப்படவேயில்லை. நிறைவேற்றப்படவில்லை என்பதிலும் பார்க்க கவனத்தில் கொள்ளப்படவேயில்லை என்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.**

**அது தொடர்பில் உறுப்பு நாடுகள் தங்கள் அதிருப்தியை – விசனத்தை – ஏமாற்றத்தை – இம்முறையும் காத் திரமான வாசகங்களில் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இதேபோன்று உதாசீனப் போக்கை இலங்கை தொடர்ந்து கடைப்பிடித்தால் அடுத்த செப்டெம்பர் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் மிகக் காட்டமான பிரேரணை ஒன்று கொண்டு வரப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்ற செய்தி இந்தக் கூட்டத் தொடரின் போது உறுப்பு நாடுகளினால் பெரும்பாலும் முன்வைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இப்போது இலங்கை விடயத்தை ஜெனிவா அமர்வில் கையாளும் பிரதான நாடு பிரிட்டன். மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இணைந்து கொள்ளும் அமெரிக்கா, இந்த விடயத்தில் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கத் தயாராகியுள்ளது.**

**ஜெனிவாவில் இந்த மார்ச் கூட்டத் தொடரை இலங்கை அரசு தாண்டினாலும், சரியான பொறி செப்டெம்பரில் அதற்குத் காத்திருக்கின்றது என்பது தான் நிலைமை.**

# உக்ரைன் இலங்கையர்கள் குறித்து ரஷ்ய படையெடுப்பினால் அவதானம்!

## காட்டுகிறது வெளிவிவகார அமைச்சு

உக்ரைனில் உள்ள இலங்கையர்களின் நிலைமை தொடர்பாக தொடர்ந்து அவதானத்துடன் உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய படையெடுப்பு உடனடியாக நிகழலாம் என்ற மேற்கத்திய நாடுகளின் எச்சரிக்கைக்கு மத்தியில் உக்ரைனை விட்டு வெளியேறுமாறு பல நாடுகள் தமது குடிமக்களை வலியுறுத்தியுள்ளன.

இந்தநிலையில் 40 இலங்கையர்கள் தற்போது உக்ரைனில் உள்ளனர் என்றும் அவர்களில் 7 பேர் உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக அங்கு சென்றுள்ளனர் என்றும் உத்தியோகப்பூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

உக்ரைனில் இலங்கைத் தூதரகம் இல்லாத போதிலும் அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பாக துருக்கி - அன்காராவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக அவதானம் செலுத்தப்படுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தகவல்களுக்கு அமைய உக்ரைனில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுமாயின் உடனடியாக அங்குள்ள இலங்கையர்களை மீள நாட்டுக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கோப் குழுவில் முன்னிலையாகுமாறு சில நிறுவனங்களுக்கு அழைப்பு

எதிர்வரும் நாள்களில் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் மேலும் சில அரசாங்க நிறுவனங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், பெப்ரவரி 24 ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனமும் அழைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அபிவிருத்தி லொத்தர் சபை மார்ச் 10 ஆம் திகதியும், கடல்சார் சூழல் பாது காப்பு அதிகாரசபை மார்ச் 11 ஆம் திகதியு கோப் குழுவில் முன்னிலையில் அழைக்கப்ப டுள்ளன. மார்ச் 23 ஆம் திகதி அரச ஈட்டு மு லீட்டு வங்கியும், மார்ச் 24 ஆம் திகதி ஏற்றும அபிவிருத்தி சபையும், மார்ச் 25 ஆம் திக மக்கள் வழங்கியும் அழைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூ டத்தொடருக்கான கோப் குழுவின் முதலாவ கூட்டம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் கோப் குழுவின் புதிய தலைவரா பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரி செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 11 வயது மாணவன் யாழில் டெங்கால் சாவு

யாழ்ப்பாணம் - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவன் டெங்கு நோய்த் தாக்கத்தால் உயிரிழந்துள்ளார். கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த 11 வயதுடைய வ.அஜய் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த வாரம் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் திங்கட்கிழமை மாலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த மாணவன் டெங்கு தாக்கத்திற்குள்ளாகியே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கஞ்சாவுடன் ஒருவர் வேலணையில் கைது

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை சந்தியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரும், ஊர்காவற்றுறை பொலிஸாரும் இணைந்து நேற்று (திங்கட்கிழமை) மதியம் குறித்த கைது நடவடிக்கையை மே ற்கொண்டுள்ளனர்.

இதன்போது 24 வயதுடைய சந்தேகநபரி மிருந்து 50 கிராம் எடையுடைய கேர கஞ்சா பொதியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது

மேலதிக விசாரணைகளின் பின்ன அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றி முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்து

# அபிவிருத்தி திணைக்கள ஊழியர்கள் இருவர் ஆராச்சிக்கட்டுவவில் வாகன விபத்தில் சாவு





புத்தளம் - கொழும்பு வீதியில் ஆராச்சிக் கட்டுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியின் வலதுபுறம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி பின்னர் சிலாபத்தில் இருந்து ஆனைவிழுந்தான் நோக்கி பயணித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த விபத்து சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்கள ஊழியர் ளான நல்லதரன்கடுவ பகுதியைச் சேர்ந்த 5 வயதுடைய எஸ்.ஏ.ஜீட் மற்றும் 51 வய டைய கே. பிரிம்ஜயந்த மேற்படி விபத்தி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெ வித்தனர். உயிரிழந்தவர்களின் சடல புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரே அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவ தொடர்பில் வானின் சாரதி பொலிஸாரா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மே திக விசாரணைகளை ஆராச்சிக்கட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
செவ்வாய்க்கிழமை 15.02.2022

# உயிர் வாழத் தகுதியான புதிய கோள் கண்டுபிடிப்பு!



மனிதர்கள், உயிர்கள் வாழத் தகுதியான ஒரு கோள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளதாக லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் பேராசிரியர் ஜேபரிகி தலைமையிலான ஆய்வு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'ஒயிட் டார்ப்' என்று அழைக்கப்படும் நட்சத்திரத்தை உயிர்கள் வாழும் சூழ்நிலை கொண்டுள்ள கோள் சுற்றி வருவது கண்டு பிடிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த கோள் நட்சத்திரத்தில் உயிர்கள் வாழக் கூடிய மண்டலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அங்கு உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு மிகவும் குளிராகவோ அல்லது அதிக வெப்பமாகவோ இருக்காது.

பூமியில் இருந்து 117 ஒளி ஆண்டு தொலைவில் இருக்கும் இந்த கோளுக்கும் அதன் நட்சத்திரத்துக்கும் இருக்கும் தூரம், பூமிக்கும் சூரியனுக்கும் இடையேஇருக்கும்தொலைவை விட 60 மடங்கு குறைவாகும். உயிர்கள் வாழக்கூடிய மண்டலம் என்பது ஒரு நட்சத்திரத்தில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் அமைந்துள்ள பகுதியாகும். இந்த பகுதியில் அமைந்துள்ள கோள்கள் திரவ நீர் இருக்க வாய்ப்புள்ள சூழ்நிலையை கொண்டிருக்கும். எனவே உயிர்கள் வாழ இது உதவும். நட்சத்திரத்துக்கு மிகவும் அருகில் ஒரு கோள் இருந்தால் அது மிகவும் சூடாக இருக்கும்.

அதிக தொலைவில் இருந்தால் மிக குளிராக இருக்கும். தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ள கோள் இருக்கும் மண்டலம் உயிர்கள் வாழ மிக சரியாக இருக்கும் பகுதியில் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## வெடித்துச் சிதறியது நாசாவின் ராக்கெட்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த ராக்கெட் தயாரிப்பு நிறுவனமான ஆஸ்ட்ரா நிறுவனம் நாசாவுடன் இணைந்து முதல்முறையாக தனது ராக்கெட்டின் மூலம் செயற்கைகோள்களை விண்ணுக்கு அனுப்ப முடிவு செய்தது.

அதன்படி நேற்று முன்தினம் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனாவெரல் ஏவுதளத்தில் இருந்து ஆஸ்ட்ரா நிறுவனத்தின் ராக்கெட் நாசாவின் 4 செயற்கை கோள்களுடன் விண்ணை நோக்கி பாய்ந்தது.

ஆனால் பூமியில் இருந்த புறப்பட்ட சில நிமிடங்களிலேயே ராக்கெட் திடீரென வெடித்துச் சிதறியது. அதைத் தொடர்ந்து ராக்கெட்டின் பாகங்கள் அந்தாட்டிக் பெருங்கடலில் விழுந்தன.

இதுகுறித்து ஆஸ்ட்ரா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி கிறிஸ் கெம்ப் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் 'எங்கள் நிறுவன ராக்கெட்டின் முதல் பயணத்தில் ஒரு சிக்கலை எதிர்கொண்டோம். எங்கள் வாடிக்கையாளரின் (நாசா) செயற்கைகோள்களை பூமி வட்ட பாதையில் நிலைநிறுத்த முடியாமல் போனதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்' என தெரிவித்துள்ளார்.



## பாடல்கள் பாடி போராட்டத்தை கலைக்க முயலும் நியூசிலாந்து அதிகாரிகள்

நாடாளுமன்ற கட்டடத்திற்கு வெளியே முகாமிட்டுள்ள எதிர்ப்பாளர்களை வெளியேற்றும் முயற்சியில், நியூசிலாந்தில் உள்ள அதிகாரிகள் அமெரிக்க பாடகர் பேரி மணிலோவின் மிகப் பெரிய வெற்றி பாடல்களை பாடி வருகின்றனர்.

அமெரிக்க பாடகரின் பாடல்கள் ஸ்பானிய நடன ட்யூன் மக்கரேனாவுடன் 15 நிமிட லூப்பில் இசைக்கப்படுகின்றன.

கொவிட்-19 தடுப்பூசி ஆணைகளில் கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், 'ட்விஸ்டட் சிஸ்டர்'ஸ் வீ ஆர் நாட் கோனா டேக் இட் போன்ற பாடல்களை இசைத்து பதிலளித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமையன்று வாகனத் தொடரணி ஒன்று நாடாளுமன்றத்திற்குச் சென்றபோது போராட்டங்கள் ஆரம்பமாகின.

கனடாவில் தடுப்பூசி ஆணைகளுக்கு எதிரான பெரிய பேரணிகளால் ஈர்க்கப்பட்டு, நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் தலைநகர் வெலிங்டனுக்கு வந்து, கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக பேரணி நடத்தினர்.

அவர்கள் 'சுதந்திரத்திற்கான கான்வாய்' என்ற பெயரை ஏற்றுக்கொண்டனர் மற்றும் நகரத்தில் வீதிகளை அடைத்தனர். புதன்கிழமைக்குள் அவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்ட போதும், வார இறுதியில் அவை மீண்டும் அதிகரித்தன.

வியாழக்கிழமை பொலிஸார் 122 பேரை கைது செய்தனர் மற்றும் அத்துமீறி நுழைந்தனர் என அல்லது தடுத்தனர் எனப் பலர் மீது குற்றம் சாட்டியுள்ளனர். பேரி மணிலோவின் சிறந்த வெற்றிகளான மாண்டி மற்றும் குட் இட் பி மேஜிக், அத்துடன் 1990களில் ஹிட் மக்கரேனா மற்றும் கொவிட் தடுப்பூசி செய்திகள் ஆகியவை அடங்கும்.




## 'போர் தீர்வு அல்ல' உக்ரேனியர்கள் எதிர்ப்பு பேரணியில் முழக்கம்!

ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்லாயிரக்கணக்கான உக்ரேனியர்கள் எதிர்ப்பு பேரணியொன்றை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் கீவ்வில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குளிர்காலக் குளிரைத் தாங்கிக்கொண்டு ஒன்றுதிரண்ட மக்கள், கொடிகளை அசைத்து, தேசிய கீதத்தைப் பாடி, அணிவகுத்துச் சென்றனர்.

'பீதி பயனற்றது. நாம் ஒன்றுபட்டு சுதந்திரத்திற்காக போராட வேண்டும்,' எனவும், சிலர் 'போர் தீர்வு அல்ல' என்று எழுதப்பட்ட பலகைகளை ஏந்தியும் சென்றனர். மற்றவர்கள் 'எதிர்க்க வேண்டும்' என்று தேசத்திற்கு அழைப்பு விடுக்கும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இதனிடையே தலைநகரின் 30 லட்சம் குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தைத் அரசாங்கம் தயாரித்துள்ளது.

உக்ரைன் மீது முழுமையாக படையெடுப்பதற்குத் தேவையான இராணுவ படைகளில் 70 சதவீதத்தை ரஷ்யா திரட்டியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் உக்ரைன் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என ரஷ்யா தொடர்ந்து கூறி வருகிறது. எனினும், மாஸ்கோ ஆதரவு பெற்ற பிரிவினைவாத கிழக்கு முழுவதும் 14,000க்கும் அதிகமான மக்களைக் கொன்ற எட்டு ஆண்டு கால மோதலால் பாதிக்கப்பட்ட உக்ரைன் இப்போது ரஷ்யாவின் முழுப் படையெடுப்பின் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது.

கிரெம்ளின் அதன் மேற்கு அண்டை நாட்டைச் சுற்றி சுமார் 130,000 துருப்புகளைக் குவித்துள்ளது, பெலாரஸ் முழுவதும் அதன் வடக்கே போர்ப் பயிற்சிகளையும் அதன் தெற்கே கருங்கடலில் கடற்படை பயிற்சிகளையும் நடத்துகிறது.

'எந்த நேரமும் போர் வெடிக்கலாம்' என்று அமெரிக்க எச்சரித்துள்ளது. மேற்கத்திய நாடுகள் தங்கள் இராஜதந்திரிகளை தலைநகர் கீவ்வில் இருந்து வெளியேற்றி, குடி மக்களை உடனடியாக உக்ரைனில் இருந்து வெளியேறுமாறு கட்டளையிடுகின்றன. நேட்டோ நட்பு நாடுகளும் கூடுதலான துருப்புக்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை உக்ரைனுக்கு அனுப்புவதன் மூலம் கியேவிற்கு ஆதரவை அதிகரித்துள்ளன.

# உக்ரைனில் இருந்து வெளியேறுமாறு இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவிப்பு



முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரைனும் அதன் அண்டை நாடான ரஷ்யாவும் நீண்ட காலமாகவே கீரியும், பாம்புமாக மோதி வருகின்றன.

உக்ரைனை நேட்டோ அமைப்பில் சேர்க்கக்கூடாது என்கிற ரஷ்யாவின் கோரிக்கையை அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பு நிராகரித்துவிட்டன. இதன் காரணமாக இந்த மோதல் தற்போது உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா சுமார் 1 லட்சம் படை வீரர்களையும், போர்த் தளவாடங்களையும் குவித்துள்ளதால் பதற்றம் நிலவி வருகிறது. உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கத்தில் ரஷ்யா படைகளைக் குவித்துள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இதனை ரஷ்யா மறுத்து வருகிறது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கும் என அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் கணித்துள்ளகர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

உளவுத்துறையின் இந்த எச்சரிக்கையை தொடர்ந்து, உக்ரைனில் இருக்கும் அமெரிக்கர்கள் அனைவரும் 48 மணி நேரத்துக்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என வெள்ளை மாளிகை அறிவுறுத்தியுள்ளது. மேலும் பல நாடுகள் உக்ரைனில் உள்ள தங்கள் நாட்டு தூதர்களை திரும்ப பெற்றதுடன், தங்கள் நாட்டு மக்களையும் உடனே நாடு திரும்ப வேண்டும் என எச்சரித்துள்ளன. இந்த நிலையில், உக்ரைனில் நிலவிவரும் போர் பதற்றம் காரணமாக அந்நாட்டில் இருக்கும் இந்தியர்கள் உடனே வெளியேற வேண் டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. உக்ரைனில் இருக்கும் இந்தியர்கள், தங்கள் நிலை மற்றும் இருப்பிடங்களை உக்ரைன் நாட்டிலுள்ள இந்திய தூதரகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், உக்ரைனுக்கு இந்தியர்கள் யாரும் செல்லவேண்டாம் எனவும் மத்திய அரசு தூதரகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# சில்லறை விலைவாசி ஜனவரியில் உயர்வு

## தேசிய புள்ளியியல் அலுவலகம் தகவல்



தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் 5.36% ஆக இருந்த சில்லறை விலைவாசி உயர்வு விகிதம், 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் 6.01% ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜனவரி மாதம் கிராமப்புறங்களில் சில்லறை விலைவாசி உயர்வு விகிதம் 6.12% ஆகவும், நகர்புறங்களில் 5.91% ஆகவும் அதிகரித்துள்ளது. உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வு விகிதம் 2021 டிசெம்பரில் 4.05% ஆக இருந்த நிலையில், 2022 ஜனவரியில் 5.43% ஆக உயர்ந்துள்ளது.

சமையல் எண்ணெய் மற்றும் கொழுப்பு ரக உணவுகளின் விலைவாசி உயர்வு விகிதம் 2021 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஜனவரில் 18.70% அதிகரித்துள்ளது. ஆடைகள் மற்றும் காலணிகள் விலைவாசி உயர்வு விகிதம் 8.84% ஆகவும், எரிபொருள்கள் விலைவாசி உயர்வு விகிதம் 9.32% ஆகவும் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை கடந்த ஒரு மாதத்தில் பீப்பாய் ஒன்றுக்கு 15 டொலர் அதிகரித்து தற்போது 95 டொலரை எட்டியுள்ளது. இதன் காரணமாக சில்லறை விலைவாசி உயர்வு மேலும் அதிகரிக்ககூடும் என பொருளியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

# இந்தியா – மாலைதீவுக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை!



இந்தியா - மாலைதீவுக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து, மாலைதீவு அதிகாரிகளுடன் இராணுவ செயலாளர் அஜய் குமார் ஆலோசனை செய்துள்ளார்.

இந்தியா - மாலைதீவுக்கு இடையிலான மூன்றாவது பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டில் மாலைதீவின் இராணுவத் தலைமை தளபதி மேஜர் ஜெனரல் அப்துல்லா மால் உள்ளிட்ட, இருநாட்டு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், அதற்கு ஒத்துழைப்பு தருவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் அச்சுறுத்தலுக்கு மத்தியில், இந்தியா-மாலைதீவு இடையிலான இந்த மாநாடு முக்கியத்துவம் மிக்கதாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட தமிழக மீனவர்கள் முடிவு

இலங்கை அரசை கண்டித்தும் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என அறிவித்துள்ளனர்.

அதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும் இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கையை கண்டித்து இன்று முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவும் முடிவு செய்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற 10இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளையும் 50க்கும் மேற்பட்ட மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் தொடர் பிரச்சினை காரணமாக ராமேஸ்வரம், தங்கச்சிமடம், மண்டபம், பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடித் தொழில் தேடி அண்டை மாநிலங்களுக்குச் சென்றதால் மீன்பிடி தொழிலாளர்கள் இன்றி விசைப்படகுகள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து நேற்று (திங்கட்கிழமை) தங்கச்சிமடம் சூசையப்பர் கோயில் வளாகத்தில் ராமேஸ் வரம் மீனவர்கள், மீன்பிடி தொழிலாளர்கள் என சுமார் 50இற்கும் மேற்பட்டோர் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இதன்போதே, எதிர்வரும் 21ஆம் திகதி தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரதப்போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும் நாளை முதல் ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானம் நிறைவேற்றினர்.

மீனவர்களின் இந்த காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக ராமேஸ்வரத்தில் உள்ள 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

மீனவர்களின் போராட்டங்கள் காரணமாக ராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் நேரடியாகவும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மீன் பிடி சார்பு தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அம்பாறையில் அடைமழைக்கு மத்தியில் அறுவடை விளைச்சலை வீதிகளில் உலர விடும் விவசாயிகள்





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை மீண்டும் பெய்து வருவதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகள் பிரதான வீதிகள் மற்றும் உள்ளக வீதிகளில் உலரவிடுவதனால் போக்குவரத்துச் சீர்கேடு ஏற்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் இச்செயற்பாடு தொடர்கதையாகவே உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையின் அறுவடை தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்ற நிலையில் அறுவடை செய்யப்பட்ட ஈரப்பதமான நெல்லைச் சந்தைப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக விவசாயிகள் அதனை இவ்வாறு வீதிகளில் உலர விடுகின்றனர். நெல்லை உலர விடுவதற்குப் போதியளவு தளம் இன்மையால் வீதியில் தாம் இவ்வாறு அதனை உலரவிடுகின்றோம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வீதிகளில் மூடை மூடைகளாக வீதிகளில் நெற்களைக் குவித்து உலர விடுவதனால் விபத்து சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. உலர விடும் நெற்கள் ஒரு பக்க வீதியை தடைசெய்து, அடைத்துக் கொண்டிருப்பதனால் வீதியில் இரு வழிப் போக்குவரத்து தடைப்படுவதுடன் வீண் விபத்துக்கள் ஏற்படுவதற்கும் அது காரணமாகி விடுகின்றது.

தனிப்பட்ட சுயலாபத்திற்காக இவ்வாறான வீதிகளை அடைத்துக்கொள்வது பெரும் தவறு என போக்குவரத்தில் ஈடுபடுவோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

## ஏறாவூரில் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 4பேர் கைது

மட்டக்களப்பு ஏறாவூரில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 4 பேரை நேற்று முன்தினம் இரவு தாங்கள் கைது செய்துள்ளோம் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் ஞாயிறு இரவு ஏறாவூர் மீராங்கேணி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்துச் சோதனையிட்ட போது இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பெண் ஒருவரிடம் இருந்து 230 மில்லி கிராம் மற்றும் இரு ஆண்களிடமிருந்து 135 கிராம், 235 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் 535 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## குமுக்கனில் காளியம்மனுக்கு விஷேட அபிஷேக வழிபாடு





( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் தென்கோடியில் உள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் ஆலயத்துக்கு அருகே அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட காளியம்பாள் விக்கிரகத்துக்கு நேற்று முன்தினம் அபிஷேகம் நடத்தப்பட்டது. விக்கிரகத்தை நிறுவிய ஸ்ரீ சிவ சங்கர் ஜீ தலைமையிலான குழு இந்த அபிஷேகத்தை சிறப்புற நடத்தியது.

# மட்டு. சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் முன்னெடுப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு,பெப்.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமாதான வேலைத்திட்டம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது. நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துக் காணப்படும் நிலையில் டெங்கு பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு நோய்களினைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்களை சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றச் செய்வதற்கான, விசேட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் படையினருடன் இணைந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுவருகின்றது.

அதற்கமைவாக பொது மற்றும் அரச நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தலைமையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளாகம் கடந்த சனியன்று சிரமதான நடவடிக்கை மூலம் சுத்தம் செய்யப்பட்டது. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் அதிக எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இச்சிரமதான நடவடிக்கையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு அலுவலக வளாகத்தினையும் அலுவலக சுற்றுச்சூழலையும் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேலும் கொவிட் – 19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாகப் பின்பற்றி நடக்கின்றமையுடன், டெங்கு நுளம்புப் பரவல் குறித்தும் அவதானமாக இருக்க வேண்டுமென மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் வலியுறுத்தினார்.

# நாடாளுமன்றத்தில் தொற்று அதிகரிப்பு பல ஊழியர்களுக்குக் கோவிட் உறுதி

நாடாளுமன்றத்தில் சில துறைகளின் பிரதான அதிகாரிகள் உட்பட 28 ஊழியர்களுக்கு கொவிட் தொற்றியுள்ளமை நேற்று (திங்கட்கிழமை) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பணிபுரியும் 112 ஊழியர்கள் நேற்று கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 28 பேருக்கு கோவிட் தொற்றியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் கடந்த சில வாரங்களில் மாத்திரம் நாடாளுமன்ற ஊழியர்களில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆகும். நாடாளுமன்றத்தில் கொவிட் தொற்று அதிகரித்து இருந்தாலும் அதன் பணிகளை வழமை போல் முன்னெடுத்து வருவதாக நாடாளுமன்ற செயலாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்தில் தனியாக சுகாதாரப் பாதுகாப்பு வேலைத்திட்டமும் கடந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை நாடாளுமன்றத்துக்கு வெளி நபர்களை அழைப்பதும் குறைக்கப்பட்டுள்ளது.




# வவுனியா வைத்தியசாலைக்கு புதிய பணிப்பாளர் நியமனம்



வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.ராகுலன் மருத்துவ நிர்வாக மேற்படிப்பிற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் பயிற்சியை மேற்கொள்வதற்காக செல்லவுள்ளார்.

வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர் தனது கடமைகளை பதில் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்திய கலாநிதி மதுரகனிடம் கையளித்துள்ள நிலையில் மத்திய சுகாதார அமைச்சுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் கொடுந்தொற்று காலத்தில் வவுனியா வைத்தியசாலைக்கு அதிகளவான நோயாளர்கள் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான சேவையை வழங்குவதற்கு வைத்தியசாலையை சீரமைத்ததுடன், வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்களை ஒழுங்கமைத்து சிறப்பான சுகாதார சேவையை வழங்கியிருந்ததுடன் பலரது பாராட்டையும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. ராகுலன் பெற்றிருந்தார்.

இதேவேளை வைத்தியசாலையின் பௌதீக வளங்களோடு வைத்திய உபகரணங்களையும் மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்களில் இருந்து பெற்று வைத்தியசாலையின் சுகாதார வசதிகளை மேம்படுத்தியிருந்ததுடன் அண்மையில் பி.சி.ஆர். ஆய்வு கூடமும் மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் தொழிற்பாடு நிலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சேவை வழங்கலின் தரத்தை குறுகிய காலத்தினுள் பல்வேறு பரிமாணங்களில் விருத்தி செய்திருந்த நிலையில் அவர் மேற்படிப்பிற்காக சுகாதார அமைச்சுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நுவரெலியா பிரதேச செயலக வர்த்தமானியை நிறைவேற்றுமாறு கையெழுத்துப் போராட்டம்

நுவரெலியாவில் பிரதேச செயலகத்தை அதிகரிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை நடைமுறைப்படுத்துமாறு கோரி கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் மலையக தமிழ்மக்களுக்கு ஆதரவாக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றுள்ளது.

மேற்படி கையெழுத்து போராட்டத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

# கொஸ்லந்தவில் துப்பாக்கிச் சூடு;12 வயது சிறுவன் பலத்த காயம்

கொஸ்லந்த கெலிபனாவெல பிரதேசத்தில் 12 வயது சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொஸ்லந்த கெலிபனாவெல பிரதேசத்தில் உள்ள பகுதியில் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பலத்த காயங்களுக்குள்ளான சிறுவன் சிறிகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய நபர் ஒருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தி ஆரம்பம்



யாழ்ப்பாணம் - மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்று (திங்கட்கிழமை) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

துறைமுகத்தின் பகுதிகளை ஆழ, அகலம் ஆக்குதல் படகுகளைக் கட்டிவைக்க ஏற்றவாறு ஆழமாக்கி அந்தப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டமிடல் மற்றும் தொழில் செய்யும் மீனவர்கள் தங்குவதற்கான வசதி, சிற்றுண்டிச்சாலை படகுகள் கட்டுவதற்கும் திரும்பிச் செல்வதற்கான பாதைகளை அமைத்தல், துறைமுகத்தை அழகுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த வருட இறுதிக்குள் இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடைந்து மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பான மாதிரிப் படம் காட்டப்பட்டு திட்ட முகாமையாளரால் அது தொடர்பிலேயே அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, அமைச்சின் செயலாளர்கள், நீரியல் வழங்கல் திணைக்கள அதிகாரிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2022இல் வெளியிடப்பெற்றது.